செ.வெ.எண்.55/மார்ச் நாள்.29.03.2020

# பத்திரிக்கைச் செய்தி

தற்போது உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் மிக வேகமாக பரவி வருகிறது. கொரோனா வைரஸ் பரவுதல் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் நிதியுதவி தமிழ்நாடு அரசுக்கு அளிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார். எனவே, தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த பொதுமக்கள் தங்களால் இயன்றதை Chief Minister Public Relief Fund என்ற முகவரிக்கு காசோலை, வங்கி வரைவாகவோ அல்லது Indian Overseas Bank, Secretariat Branch, Chennai-600009 Savings Bank Account Number:117201000000070, IFSC Code:IOBA0001172, CMPRF PAN: AAAGC0038F என்ற வங்கி கணக்கிற்கு மின்னுபரிவர்த்தனை (ECS) மூலம் அனுப்பி வைத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நிவாரணப் பொருட்கள் (Mask, Hand Sanitizer, இதர பொருட்கள்) நன்கொடை அளிக்க விருப்புவர்கள், பொருட்கள் விவரத்தினை திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தருமபுரி கைபேசி எண் - 7373704209 அவர்களுக்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளில் தன்னார்வலராக பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள் (மருத்துவர், செவிலியர்கள், தொண்டு நிறுவனங்கள்) தங்களது பெயர், முகவரி மற்றும் கைபேசி எண் ஆகிய விவரங்களை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி), தருமபுரி (கைபேசி எண். 07402606939 அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி,இஆப, அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**